பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## முறைப்பாடு 3,276

கொழும்பு, ஏப். 29
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் இதுவரை 3 ஆயிரத்து 276 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக் ☞ 11

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 154

செவ்வாய்க்கிழமை
29 ஏப்ரல் 2025

சித்திரை 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

# மே மாதம் நடுப்பகுதியில் செம்மணியில் அகழ்வு?

## தற்காலிக கொட்டகை அமைப்பு ஏனைய ஏற்பாடுகளும் நிறைவு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 29**
**அரியாலை செம்மணிப் புதைகுழியில் மே மாதம் மத்திய பகுதியில் அகழ்வுப்பணிகள் இடம்பெறலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையடைந்துள்ளன என்றும் தெரியவருகின்றது.** ☞ 11

## வர்த்தக நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது இலங்கை!

### சீனா கைகொடுக்குமாம்

கொழும்பு, ஏப்ரல் 29
இலங்கை இன்று கொந்தளிப்பான வர்த்தக உலகத்துக்குள் முழுமையாகச் சிக்கியுள்ளது. இலங்கையின் உரிமைகள் குறைமதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து மீள்வதற்கு சீனா இலங்கைக்கு உதவும்-இவ்வாறு சீனத் தூதுவர் கீ ஷென் கொங் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடை ☞ 11

### யாழ்ப்பாணத்தில்

## மின்னல் தாக்கத்தால் 19 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாக இடம்பெற்று வரும் தொடர்ச்சியான இடிமின்னல் தாக்கத்தால் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத் ☞ 04


## தவறான முடிவெடுத்து பெண் பலி

யாழ்ப்பாணம், ஏப். 29
தவறான முடிவெடுத்து 30 வயதுடைய குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.
இணுவில் கிழக்கைச் சேர்ந்த அந்தப் பெண், அண்மைக்காலமாக மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தார், இதன் காரணமாகவே தவறான முடிவெடுத்து உயிரிழந்தார் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் ☞ 11

## 14 வயதேயான சிறுவன் ஐ.பி.எல்.லில் சதம்!



ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில், 14 வயதேயான சூர்யவன்ஷி வெறும் ☞ 04



## தபால் வாக்களிப்பு இன்றுடன் நிறைவு!

கொழும்பு, ஏப். 29
உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு இடம்பெற்று வரும் தபால்மூல வாக்களிப்பு இன்றுடன் நிறைவடைகின்றது.
உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு தபால்மூல வாக்களிப்பு கடந்த 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெற்றது. அன்றைய தினங்களில் வாக்களிப்பை மேற்கொள் ☞ 11

## சஜித்தை ஜனாதிபதியாக்கும் வேலைத்திட்டங்கள் ஆரம்பம்!

### ஹர்ஷன ராஜகருணா தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 29
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வென்ற பின்னர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா கொழும்பில் நேற்று செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். இதன் ☞ 11

## ரணிலில் கைவைக்கும் துணிவு அரசுக்கில்லை

### பிரதான எதிர்க்கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 29
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது கைவைக்கும் துணிவு அரசாங்கத்துக்கு இல்லை என்று பிரதான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார். ☞ 04



'உந்த ரெலிபோன்காரர் இப்பிடி பகல் கனவு காண்றதாலதான் பதவிக்கு வராமலேயே இருக்கினம் கண்டியளோ'

## வவுனியா இரட்டைக் கொலை; சந்தேகநபர்களுக்குப் பிணை!

### வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவு

வவுனியா, ஏப். 29
வவுனியா தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைகள் தொடர்பில், நீண்ட நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கி வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹாஸ் உத்தரவிட்டார். ☞ 11

### மாணவர்கள் மீதான அடக்குமுறை

## விசாரித்து அறிக்கையிடுமாறு யாழ்.பல்கலைக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரித்து அறிக்கையிடுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.
யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் தமது ☞ 04

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 28.04.2025 | திகதி 28.04.2025 | திகதி 28.04.2025 | திகதி 28.04.2025 | திகதி 28.04.2025 | திகதி 28.04.2025 | திகதி 28.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4057 | சீட்டிழுப்பு இலக்கம் 1124 | சீட்டிழுப்பு இலக்கம் 0083 | சீட்டிழுப்பு இலக்கம் 2163 | சீட்டிழுப்பு இலக்கம் 5815 | சீட்டிழுப்பு இலக்கம் 1845 | சீட்டிழுப்பு இலக்கம் 0390 |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கினம் விருச்சிகம் | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து F |
| வெற்றி இலக்கங்கள் 48 50 70 77 | வெற்றி இலக்கங்கள் 08 27 30 31 | வெற்றி இலக்கங்கள் 7 4 6 9 | சுப்பர் இலக்கம் 24 | வெற்றி இலக்கங்கள் 4 3 4 7 0 4 | வெற்றி இலக்கங்கள் 20 37 43 74 | வெற்றி இலக்கங்கள் 4 7 0 4 |
| விசே. எழுத்து M | | | வெற்றி இலக்கங்கள் 30 39 69 74 | | விசேட எழுத்து E | |

# இந். - பாக். இடையே ரஷ்யா மத்தியஸ்தம்

## ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை

**கொழும்பு, ஏப்.29**

**இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை போர் ஏற்படாது தணிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் ரஷ்யா மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் தற்போது நிலவும் சூழ்நிலை அவ்வளவு நல்லது அல்ல. இருதரப்புக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்துவதற்கு ரஷ்யாவால் மத்தியஸ்தம் வகிக்க முடியும். போர் ஏற்படாதவகையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படவேண்டும். போர் ஏற்படுவதற்குரிய சூழ்நிலை தற்போது இல்லை என்றபோதும் பதற்ற நிலை உக்கிரமடைந்துவருகின்றது. காஷ்மீரில் மட்டுல்ல, உலகில் எந்த மூலையில் பயங்கரவாதம் இருந்தாலும் நாம் அதை எதிர்க்கவேண்டும்-என்றார். (எ-33-44)

## உச்சம் தொட்டுள்ள உப்பு விலை

கிளிநொச்சி, ஏப்.29

கிளிநொச்சி மாவட்டத்தில் உப்புக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும், சில வர்த்தக நிலையங்களில் ஒருவருக்கு ஒரு கிலோ உப்பு மட்டுமே வழங்கப்படுகின்றது என்று நுகர்வோர், ஒரு கிலோ உப்பு 300 ரூபாவுக்கே விற்கப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் ஆனையிறவு உப்பு அனைவருக்கும் கிடைக்கும் என்று கூறப்பட்ட போதும், இதுவரையில் ஒரு கிலோ உப்பைக் கூட பெறமுடியவில்லை. இந்த நிலைமை தொடருமானால் தேங்காய்க்கு ஏற்பட்ட தட்டுப்பாடு போன்று உப்புக்கும் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-25,113)

## தற்கொலைக் குண்டுத் தாக்குதல்; மைத்திரி நேற்றுச் சாட்சியம்

கொழும்பு, ஏப்.29

2008ஆம் ஆண்டு பொரலஸ்கமுவப் பகுதியில் நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பான வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுச் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் முதற்சாட்சியாகப் பெயரிடப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று கொழும்பு உயர்நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி பொரலஸ்கமுவ பகுதியில் அப்போதைய விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவைக்கொலைசெய்யும் நோக்கில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு உதவின என்று இருவருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, முன்னதாக விடுக்கப்பட்ட அறிவிப்பின்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்னிலையானார். (எ-இ)




## தராகி சிவராம், ரஜிவர்மனுக்கு யாழ்ப்பாணத்தில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஏப்.29

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராம் மற்றும் உதயன் அலுவலகச் செய்தியாளர் ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வும், அவர்களின் படுகொலைக்கு நீதிகோரி போராட்டமும் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் உள்ள நினைவுத் தூபி முன்பாக நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வு நடந்த பகுதியில் பொலிஸார் சீருடையிலும், சிவில் உடையிலும் குவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் நிகழ்வில் பங்குகொண்டவர்களை ஒளிப்படம் மற்றும் காணொலி எடுத்தனர் என்று கூறப்படுகின்றது. (எ-125,20,[illegible])

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 28.04.2025 | தினம் திங்கட்கிழமை | வெற்றி வாரம் 0523 |
| ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 1 6 3 3 3 6 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 28.04.2025 | தினம் திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2789 | ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 21 42 49 73 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 28.04.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கம் 32 39 41 55 | வெற்றி வாரம் 4950 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 28.04.2025 | தினம் திங்கட்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் 02 38 39 56 | சீட்டிழுப்பு வாரம் 4501 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 28.04.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து F | சுப்பர் இலக்கம் 17 | வெற்றி இலக்கம் 15 60 69 73 | வெற்றி வாரம் 1965 |


| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 28.04.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கம் 04 31 32 39 | வெற்றி வாரம் 2615 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி 28.04.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 03 16 32 34 | வெற்றி வாரம் 2122 |


## சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிப்பு

முல்லைத்தீவு, ஏப்.29

புதுக்குடியிருப்பில் இருந்து யாழப்பாணத்துக்கு கடத்திவரப்பட்ட முதுரை மரக்குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மரக்குற்றிகளை ஏற்றிவந்த சிறிய ரக லொறி மடக்கிப்பிடிக்கப்பட்டதுடன், அதன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏ35 பிரதான வீதியில் நடந்துள்ளது. 12 முதுரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (எ-25,113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரப் பரீட்சையில் தோற்றியோருக்கு

# இணையத்தளத்தின் ஊடாக பெறுபேறைப் பெறும் வசதி!

**கொழும்பு, ஏப்.29**
**க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகளும் தங்களின் பெறுபேறுகளை இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளமுடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.**

பரீட்சார்த்திகள் https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளத்தில் தங்கள் தேசிய அடையாள அட்டை எண்ணை உள்ளீடு செய்வதன் ஊடாக பெறுபேறுகளைப் பதிவிறக்கலாம். சகல அதிபர்களுக்கும் https://onlineexams.gov.lk/eic எனும் இணைப்பினூடாக பெறுபேற்றைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் என்பவற்றை பயன்படுத்தி உரிய பாடசாலைகளின் பெறுபேற்று அட்டவணைகளை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.
மீள் பரீசிலணை செய்யப்பட்ட பெறுபேறுகள் வெளியான பின்னர் பாடசாலைகளுக்கு அச்சிடப்பட்ட பிரதிகள் அதிபர்களுக்கு வழங்கப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது.(எ-இ)

## பாவிக்காது விடப்பட்டுள்ள அம்புலன்ஸ்கள்

கொழும்பு, ஏப்.29
சுகாதார அமைச்சின் நிர்வாகக் குறைபாடு காரணமாக 300 முதல் 600 மில்லியன் ரூபா பெறுமதியான அம்புலன்ஸ்கள் நாடாளுமன்றத்துக்கு அருகிலுள்ள ஒரு கட்டடத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாகத் தரித்துள்ளன என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த அம்புலன்ஸ்கள் நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் இறக்குமதிசெய்யப்பட்டு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டவை.
பராமரிப்பு வேலைகளுக்காக இந்த இடத்தில் கொண்டுவந்து விடப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு வாகனங்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதை தடுக்கும் நோக்குடன் சுகாதார அமைச்சின் வாகனங்கள் யாவும் டிஜிற்றல் முறையில் பதிவுசெய்யப்பட்டன என்றும்,
ஆனால் 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கைகள் கணக்காய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-336)

## நுளம்பு உற்பத்தியிடமாக ஜனாதிபதி பங்களாக்கள்

**சட்டநடவடிக்கைக்குத் தீர்மானம்**

கொழும்பு, ஏப்.29
முன்னாள் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதிகளின் வாசஸ்தலங்கள் வருமானம் ஈட்டக்கூடிய வகையில் மாற்றப்படும் என்று அரசாங்கம் அறிவித்தபோதும், இந்த பங்களாக்கள் யாவும் காடு மண்டி நுளம்புகள் பெருகும் வகையில் காணப்படுகின்றன என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வாசஸ்தலங்களும் இதில் அடங்கும். கடந்த ஆறு மாதங்களாக இந்த பங்களாக்கள் யாவும் பூட்டிக்கிடக்கின்றன. ஆனால் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
இந்த பங்களாக்கள் அனைத்தும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இந்த பங்களாக்கள் நுளம்பு களை உற்பத்திசெய்யும் இடங்களாகக் காணப்படுகின்றன என்றும், இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் கொழும்பு மாநகர சபை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (எ-33-6)

## சுற்றுலாவிகளின் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.29
ஏப்ரல் மாதத்தில் மட்டும் சுமார் 30 ஆயிரம் இந்தியர்கள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலாத்துறைத் தரவுகள் தெரிவித்துள்ளன. அதன்படி, ஏப்ரல் மாதத்தின் முதல் 24 நாள்களில் மொத்தம் ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 320 வெளிநாட்டினர் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்களில் 29 ஆயிரத்து 763 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்களாவர்.
அதேவேளை, 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்குவந்தசுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 8 இலட்சத்து 66 ஆயிரத்து 596 ஆக அதிகரித்துள்ளது. (எ-இ)

## மின்னல் தாக்கி 11 பேர் பாதிப்பு

*ஒருவர் பலி*

மின்னர் காரணமாக நாட்டில் நேற்றுப் 11 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.
அட்டாம்பிட்டிய பகுதியில் 5 பெண்கள் மற்றும் ஓர் ஆண் மின்னலால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், மேலும் ஒரு பெண் உயிரிழந்துள்ளார்.
இதைவிட அநுராதபுரத்தில் ஐந்து பேர் மின்னலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஒட்டுமொத்தமாக நேற்றுமின்னலால் பாதிக்கப்பட்டவர்களின்எண்ணிக்கை [illegible] (ம)

## உயிர் அச்சுறுத்தல்; பாதுகாப்பு தேவை

*நிசாந்த சொய்சா கோரிக்கை*

உயிர் அச்சுறுத்தல் உள்ளமையால் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று மாத்தறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிசாந்த சொய்சா, பொலிஸ்மா அதிபருக்கும்,பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.
முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீதான விசாரணைகளை நிசாந்த சொய்சாவே மேற்கொண்டுவருகிறார். கடந்த 10ஆம் திகதி முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில், அன்றையதினமே சொய்சாவுக்கு அச்சறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதையடுத்து மாத்தறை மாவட்ட மாஜிஸ்திரேட் அர்ஜுன இந்திரஜித் நிசாந்த சொய்சாவுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். (எ-33-6)




உப்பில்லாப் பண்டம் குப்பையில எண்டு கேள்விப்பட்டிருப்பியள். ஆனால் 'இப்ப நாட்டிலையே உப்பில்லை எண்டு கையை விரிக்கினம். அப்ப நாட்டையும் குப்பையிலயோ போடோணும்?' எண்டு சிலர் யோசிப்பியள். நாலுபக்கமும் உப்புத் தண்ணி இருந்தும் இலங்கையில உப்புத் தட்டுப்பாடு எண்டால் அது ஆரின்ர பிழை? இப்பிடி உப்புத்தட்டுப் பாடு வரப்போகுது எண்டு ஆறேழு மாதத்துக்கு முதலே எல்லாரும் கத்திக் கொண்டிருக்கினம். ஆனால் அதைத் தடுக்க உருப்படியா ஒண்டும் செய்யேலை. ஆனையிறவு உப்பளத்தை திறந்து 'ரஜ உப்பு' பைக்கற்றை கொண்டந்தவைதானே எண்டு சிலர் வரிஞ்சு கட்டிக்கொண்டு வருவினம்.

ஆனையிறவில ரண்டு உப்பளங்கள் இருக்கு. ஒண்டு வெள்ளைக்காரர் காலத்தில உருவாக்கினது. அதில கடல் தண்ணியை குளம் மாதிரி தேக்கி, பெரியளவில தேக்கிவைச்சு, அதை உப்பா மாத்துவினம். இப்பிடிக் குளத்தில உப்பு விளைய, மூண்டு வருசத்துக்குக்கிட்டச் செல்லும்.ஆனாலும் குளத்தை நாலைஞ்சு பிரிவாக்கி , ஒவ்வொரு பக்கத்தாலை ரொட்டேசனில உப்பை எடுப்பினம். அதால ஒவ்வொரு வருசமும் அதில உப்பை எடுப்பி னம். அதைத்தான் ஆனையிறவு உப்பளம்எண்டும்சொல்லுவினம். இன்னொண்டு ஆனையிற வில உள்ள குறிஞ்சாத்தீவில இருக்கு. அதில வயல்மாதிரி, தண்ணியைப் பரவலா விட்டு, பாத்தி கட்டி உப்பு விளைவிப்பினம். இந்த உப்பு கொஞ்சம் கெதியா விளைஞ்சிடும். ஆனால் சண்டைக்கு பிறகு இந்தக் குறிஞ்சாத் தீவை எல்லாரும் கைவிட்டிட் டினம். சண்டைக் காலத்தில இயக்கமும் ஆனை யிறவில இருக்கிற பெரிய உப்பளத்தில தான் உப்பு விளைவிச்சு, சனத்துக்கு குடுத்தவை. வருசக் கணக்கில பாதை பூட்டி, பொருளாதாரத் தடை போடுப்பட்ட காலத்திலகூட இஞ்ச உப்புக்கு தட்டுப்பாடே வரேலை. ஆனால் இப்ப வந்திருக்கெண்டால் என்ன அர்த்தம்? இவையள் இன்னும் ஒழுங்கா ஆனையிறவில இருக்கிற பெரிய உப்பளத்தில இருந்து உப்பை விளைவிக்கத் தொடங்கேலை.

இப்ப கொஞ்சநாளா பெய்யிற மழையால அங்க விளைஞ்ச உப்பை பைக்கற் பண்ண ஏலாமல் இருக்காம். மழை விட்ட பிறகுதான் உப்புப்பாத்தியள் காய்ஞ்சு வரும், அதுக்குப் பிறகுதான் அங்கையிருந்து உப்பை பைக்கற் பண்ணி கடையளுக்கு அனுப்புவினம். அதை விட மன்னார் உப்பளக்காரரும் ஆனை யிறவில இருந்துதான் கொஞ்சநாளைக்கு முதல் பைக்கற் பண்ணுறதுக்கு ஒரு தொகை உப்பை எடுத்திருக்கினம். ஆனையிறவில உப்பை உடன பைக்கற் பண்ணமுடியாமல் கிடக்காம். பெருமெடுப்பில உப்புக் கொம்பனியைத் திறந்த அரசாங்கம், மழைக்குள்ள உப்புப்பாத்தியள் நனையாதமாதிரியும் ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தால் இப்பிடி, திடீரெண்டு உப்புத் தட்டுப்பாடு வந்திருக்காதே. பேரை மட்டும் 'ரஜ உப்பு' எண்டு சிங்களத்தில வைச்சு விலாசம் காட்டத் தெரிஞ்சவைக்கு, அங்கையி ருந்து தொடர்ச்சியா உப்பை விளைவிச்சு, சனத்துக்கு குடுக்கிற வழிவகை தெரியாமல் போட்டுதே.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிப்போம்!

## வீடமைப்பு அமைச்சர் கருணாதிலக யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஏப். 29**
**தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மூன்றிலொரு பங்கு, மீள்குடியேற்றம் உட்பட ஏனைய திட்டங்களுக்காக யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கே ஒதுக்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்துக்கு அண்மையில் வருகைதந்த நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதி அமைச்சர் ரி.பி. சரத் ஆகியோர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபனைச் சந்தித்து மீள்குடியேற்றச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது இதுவரை விடுவிக்கப்பட்ட காணி மற்றும் விடுவிக்கவேண்டிய காணியின் விவரங்கள், தெல்லிப்பழைப் பிரதேச உள்ளக வீதி அபிவிருத்தி, குடிநீர் வசதிகள், மின்சார இணைப்பு வசதிகள் தொடர்பாகவும் விளக்கமளித்து அதுதொடர்பான கோரிக்கைகளும் மாவட்டப் பதில் செயலரால் முன்வைக்கப்பட்டது. அதற்கு குறித்த தேவைப்பாடுகளைச் சாதகமாக பரிசீலிப்பதாகத் தெரிவித்த நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக, அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் கூடிய நிதி ஒதுக்கீடு செய்யத் திட்டங்களைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார். ஒதுக்கப்படும் நிதிகளை இந்த ஆண்டுக்குள் உரிய திட்டங்களுக்குச் செலவுசெய்து முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பிவைக்குமாறும் குறிப்பிட்டார். (ச-66-27-125-9)

# விவசாயத் திணைக்களத்தை கண்டித்து நாளை போராட்டம்

## விவசாய போதனாசிரியர்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29
வடமாகாண விவசாயப் போதனாசிரியர்கள் தொழிற்சங்கத்தினர், அடையாள சுகவீன விடுமுறைப் போராட்டத்தினை நாளை புதன்கிழமை மேற்கொள்ளவுள்ளனர்.
வடமாகாண விவசாயப் போதனாசிரியர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால நிர்வாக, நிதி தொடர்பான தொழில்முறைமைக் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யாத வடமாகாண விவசாய திணைக்களத்தின் செயற்பாட்டைக் கண்டித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. அன்றையதினம் விவசாயிகளுக்கு ஏற்படும் சேவைத்தடைகளுக்கு வடமாகாண விவசாயப் பணிப்பாளரே பொறுப்பாளியாவார் என வடமாகாண விவசாய போதனாசிரியர்கள் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. (ம-25)

# குருதிக் கொடை

சாவகச்சேரி, ஏப். 29
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இறைபதமடைந்த உதவிப் பிரதேச செயலர் திருமதி தமிழினி சதீஸின் நினைவாக பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலக மண்டபத்தில் குருதிக்கொடை நிகழ்வு நாளை புதன்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் மதியம் 12 வரை நடைபெறவுள்ளது. (ம-25-9)



அராலி மேற்கு மலரும் மலர்கள் சிறுவர் பாடசாலையில் சிறுவர் சந்தை நிகழ்வு பொறுப்பாசிரியர் கஜன் ராஜ் டிலுசியா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-22,27)

# ஊடகவியலாளர் ரூபனின் 15 ஆவது நினைவேந்தல் !

யாழ்ப்பாணம் ,ஏப். 29
மறைந்த ஊடகவியலாளர் அமரர் சி.செ.ரூபனின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பொன்னாலை கண்ணபிரான் படிப்பகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் ஊடகவியலாளர் ந.பொன்ராசா மற்றும் ஆசிரியர் மா. ஜெயக்குமார் ஆகியோர் நினைவுரைகள் ஆற்றினர். இதேவேளை, தமிழ்த்தேசியத்தை ஆழமாக நேசித்த ரூபன் இறுதிப்போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை உலகுக்கு வெளிக்காட்டுவதில் சிறப்பான ஊடகப்பணியை ஆற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22,66)



## விசாரித்து...

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் செயற்படுகின்றனர். அத்துடன், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை விதிகளை மீறியும் செயற்படுகின்றனர் என்று மாணவர்கள் மூவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.
இதைத் தொடர்ந்தே இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கையிடுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக் கழக நிர்வாகத்தை அறிவுறுத்தியுள்ளது. (அ-ம-26)

## ரணிலில்...

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
ரணில் விக்கிரமசிங்கவின் புண்ணியத்தால்தான் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியானார். ரணில் இல்லையேல் அநுர இப்பதவிக்கு வந்திருக்கமாட்டார். எனவே, பரப்புரை மேடைகளில் கூறப்படுவதுபோல ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என நாம் நம்பவில்லை. என்ன நடக்கின்றது எனப் பொறுத்திருந்து பார்ப்போம் - என்றார். (அ-ம-44)

## மின்னல்...

துவப் பிரிவு தெரிவித்துள்ளது.
உடுவில் மற்றும் சாவகச்சேரியில் தலா இரண்டு குடும்பங்களும், கோப்பாய் மற்றும் மருதங்கேணியில் தலா ஒரு குடும்பமும் என ஒட்டுமொத்தமாக 6 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-27)



## 14 வயதான...

35 பந்துகளில் சதம் கடந்து ராஜஸ்தானின் வெற்றிக்கு வித்திட்டார். இந்தச் சதத்தின் மூலம், ஐ.பி.எல். வரலாற்றில் குறைந்த வயதில் சதத்தைப் பதிவுசெய்த இந்திய வீரர், குறைந்த பந்துகளில் சதத்தைப் பதிவுசெய்த இந்திய வீரர், இரண்டாவது குறைந்தளவு பந்துகளில் சதத்தை நிறைவு செய்த வீரர் உள்ளிட்ட சாதனைகளை சூரியவன்ஷி படைத்தார்.

**ராஜஸ்தான் வெற்றி**
ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியும் குஜராத் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய 20 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கில் 84 ஓட்டங்களைப் பெற்றார்.
பதிலுக்குக் களமிங்கிய ராஜஸ்தான் அணியின் ஆரம்ப வீரர்களாக 14 வயதேயான சூரியவன்ஷியும் ஜெய்ஸ்வாலும் களமிறங்கினார்கள். ஆட்டத்தின் முதலாவது பந்தில் இருந்து அடித்தாட ஆரம்பித்தார் சூரியவன்ஷி. சிராஜ், இஷாந் சர்மா, ரஷிட் கான் எனஅனைத்துப் பந்துவீச்சாளர்களும் சூரியவன்ஷியால் முறையாகக் கவனிக்கப்பட்டனர். வெறும் 17 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் சூரியவன்ஷி. அதிரடி தொடர்ந்தது. கரிம் ஜனட் வீசிய ஓவரில் மூன்று பவுண்டரிகள், மூன்று சிக்சர்கள் என 30 ஓட்டங்களை விளாசினார். எதிரணி வீரர்களே எழுந்து நின்று கைதட்டும் அளவுக்கு அவரின் ஆட்டத்தின் வீச்சு அமைந்தது. முடிவில் 35 பந்துகளில் அவர் அபார சதம் கடந்தார். சச்சின், டோனி, கோலி ஆகிய வீரர்களின் பெயர்களை ரசிகர்கள் பாடலாகப் பாடுவது வழமை. அது நேற்று வெறும் 14 வயதுச் சிறுவனுக்காக நிகழ்ந்தது. ஆட்டத்தை வர்ணித்துக் கொண்டிருந்த வர்ணனையாளர்களில் ஒருவர், சூரியவன்ஷியை கோடியில் ஒருத்தன் என புகழ்ந்தார். இதன்போது குறுக்கிட்ட சுனில் கவாஸ்கர், '140 கோடிகளில் ஒருத்தன்' என புகழ்ந்தார். நேற்றைய ஒரேநாளில் கிரிக்கெட் உலகில் புகழின் உச்சிக்கு சூரியவன்ஷி சென்றார்.
38 பந்துகளில் 101 ஓட்டங்களுடன் வைபவ் சூரியவன்ஷி ஆட்டமிழந்தார். எனினும் 15.5 ஓவர்களில் இலக்கை எட்டிப்பிடித்து வென்றது ராஜஸ்தான். ஜெய்ஷ்வால் 70 ஓட்டங்களுடனும், ரியான் பராக் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# வெள்ளை ஈக்களோடு ஏனிந்த மென்போக்கு?

வடக்கு மாகாணத்தில் உள்ள தென்னைகளில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆளுநர் செயலகத்தில் அண்மையில் கலந்துரையாடப் பட்டுள்ளது. 'எத்தகைய திட்டங்களை மேற்கொண்டு இந்த ஈக்களைக் கட்டுப்படுத்துவது?' என்பதே இந்தக் கலந்துரையாடலில் மையப் பொருளாக நிலைபெற்றிருந்தது. அத்துடன், வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்கள் மிகவும் மந்த கதியில் நகர்ந்துகொண்டிருக்கின்றன என்ற அதிருப்தியும் கூட்டத்தில் வலுவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

வெள்ளை ஈக்களின் தாக்கம் காரணமாக, தென்னைகளின் உற்பத்தித்திறன் வெகுவாகக் குறைந்துள்ளது. பல இடங்களில் மூன்றில் ஒருபகுதி தேங்காய் உற்பத்தியே கிடைக்கின்றது என்றும், மூன்றில் இரண்டுபகுதி உற்பத்தி வெள்ளை ஈக்களின் பரவுகையால் நாசம் செய்யப்பட்டுள்ளது என்றும் பண்ணையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இலங்கையில் வடக்கு மாகா ணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் தேங்காய் உற்பத்தியை மையப்படுத்தி பல்லாயிரம் குடும் பங்கள் வாழ்ந்து வருகின்றன. ஆதலால், வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் குறிப்பிட்டளவு குடும்பங்கள் தங்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் கணிசமான அளவுக்கு இழந்துள்ளன என்றும் கூறிக்கொள்ளலாம்.

தென்னைகளில் வெள்ளை ஈக்கள் பரவுகின்றன என்பதும், அவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் பாரதூரமானவை என்பதும் புதிதாகக் கண்டுபிடித்து முன்வைக்கப்படுபவையல்ல. 2023ஆம் ஆண்டிலேயே இந்த விடயங்கள் அனைத்தும் முறையான தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டு விட்டன. கிட்டத்தட்ட இரண்டு வருட காலத்துக்கு முன்னர் சொல்லப்பட்ட - எச்சரிக்கப்பட்ட விடயத்தைத் தான், தற்போதும் எமது அதிகாரிகள் பரிசீலனை மட்டத்தில் வைத்திருக்கின்றனர். எத்தனை பெரிய அபத்தம் இது?


வடக்கில் தெங்கு முக்கோண வலயத்தை உருவாக்கவுள்ளோம். இதற்காக பொதுமக்களுக்குப் பல்லாயிரம் தென்னைகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினர் அண்மைக்காலமாகத் தெரிவித்து வருகின்றனர். வடக்கில் தெங்கு முக்கோண வலயம் உருவாக்கப்படுவதை எவரும் தடுக்கப் போவதில்லை. ஆனால், ஏற்கனவே இருக்கும் இலட்சக்கணக்கான தென்னைகளில் வெள்ளை ஈ காரணமாக உற்பத்தித்திறன் குறைவடைந்திருக்கின்றதே, அதற்கு இந்த அரசாங்கம் கொண்டுள்ள தீர்வு என்ன?

இரண்டு வருடங்களாகத் தாம் ஆட்சியில் இல்லை என்றும், தாம் ஆட்சிக்கு வந்து வெறும் ஆறு மாதங்களே ஆகின்றன என்றும், வழக்கம்போல தேசிய மக்கள் சக்தியினர் கூறிக்கொள்ளலாம். ஆனால், வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்துவதற்கான பொதுப்பொறிமுறை ஒன்றைச் செயற்படுத்துவதற்கு ஆறு மாத காலத்தை போதிய கால அவகாசமாகவே கொள்ளவேண்டும். நிபுணத்துவ அறிவால் மட்டுமே இந்தப் பிரச்சினையைச் சீர்செய்ய முடியும் எனும்போது அரசாங்கத்தின் வகிபங்கு அவசியமும் அவசரமுமாகும்.

## நாளொரு நல்வார்த்தை

பணம் ஓர் அத்தியாவசியப் பொருள்
ஆனால் மனித உழைப்பிற்கு முன்னால்
அது கீழ்த்தரம் உடையது.

– சாமெர்செட் மகம் –




# வரிச்சிக்கலை தீர்ப்பதற்காக அமெ. பொருள்கள் இறக்குமதி



## இலங்கை தீர்மானம்

கொழும்பு, ஏப்.29

**அமெரிக்காவின் வரிவிதிப்பை நிவர்த்தி செய்யும்வகையில் அமெரிக்க உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

அமெரிக்காவின் வரி விதிப்புத் தொடர்பாக அமெரிக்க வர்த்தகக் குழுவின் பிரதிநிதி ஜமீசன் கிரீருடன் இலங்கைக்குழு வொஷிங்டனில் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளது. பெற்றோல், எரிவாயு, வாகனங்கள் உட்பட ஏனைய உற்பத்திகளை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வது தொடர்பில் அதில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கலந்துரையாடலின் முடிவில் இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச்செய்து கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். நிதி மற்றும் அபிவிருத்தி பிரதியமைச்சர் ஹர்ஷண சூரியபெரும, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, நிதியமைச்சின் செயலர் மகிந்த சிறிவர்தன ஆகியோர் இலங்கைக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். இந்தியாவுக்கு அடுத்தபடியாக அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளவுள்ள தெற்காசிய நாடு இலங்கை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (எ-33-6)

# பிரசன்னவின் ரிட் மனு நிராகரிப்பு

கொழும்பு, ஏப்.29

கைதுசெய்யப்படுவதைத் தடுக்கக்கோரி முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர தாக்கல்செய்திருந்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர, 2010ஆம் ஆண்டு போலி ஆவணங்களைத்தயாரித்து கிரிபத்கொடவில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்தமை தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. இந்தநிலையில், தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்கக்கோரி முன்னாள் அமைச்சரால் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்று தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

அந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது, மேன்முறையீட்டு நீதிமன்றம் மனுவை நிராகரித்துள்ளது. (எ-இ)

# நிறுத்தப்படவுள்ள 24 மணிநேர கடவுச்சீட்டுச் சேவை

கொழும்பு, ஏப்.29

24 மணித்தியால கடவுச்சீட்டு சேவை அடுத்த மாதத்துடன் நிறுத்தப்படும் என பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் அடுத்த மாதம் கடவுச்சீட்டு சேவை இயல்புநிலைக்குத் திரும்பிவிடும். அதனால் 24 மணித்தியால சேவை அவசியமற்றதொன்றாகிவிடும்.

வழமைபோல் 8 மணித்தியால சேவையே நடைபெறும். ஆயினும் யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் திறக்கப்படுவதைப்பொறுத்தே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது. இலத்திரனியல் கடவுச்சீட்டைக் கொள்வனவு செய்வதில் எதுவித தடங்கலும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33-6)

# அரசாங்கத்தின் வருமானம் அதிகரிப்பு

கடந்த ஜனவரி மாதம் அரசாங்கத்தின் வருமானம் 22 வீதத்தால் உயர்ந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கித் தரவுகள் தெரிவிக்கின்றன. ஜனவரி மாதம் அரசாங்கத்தின் வருமானம் 346.58 பில்லியன் ரூபாவாக ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் அரசாங்கத்தின் வருமானம் 283.13 பில்லியன் ரூபாவாக இருந்தது. (எ-இ)

# உபயோகித்த வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, ஏப்.29

ஆயிரத்து 500 உபயோகித்த வாகனங்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. டொயட்டோ, லாண்ட் குரூஸர், பரடோ, சுசுகி, பென்ஸ், ஹொண்டா, டெயிகற்சு, டொயட்டோறெயிஸ் வகனர் ஆகிய வாகனங்களே எடுத்துவரப்பட்டுள்ளன. அவற்றில் குண்டு துளைக்காத வாகனங்களும் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த மாத ஆரம்பத்தில் மேலும் 3 ஆயிரத்து 500 வாகனங்கள் எடுத்துவரப்படவுள்ளன என்று வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-33-6)

நாளை
புதன்கிழமை -சித்திரை 15
30.04.2025
சுபநேரம் : 4.28 - 05.58
ராகுகாலம் : 11.58 - 08.58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிகரன் பங்கேற்புடன் பரப்புரை கூட்டங்கள்

முல்லைத்தீவு, ஏப்.29
கரைத்துறைப்பற்று, தண்ணீரூற்று வட்டாரத்திலும் புதுக்குடியிருப்பு, தண்டுவான் வட்டாரத்திலும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் கலந்துகொண்டு, தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். (எ-24-6)


# ஊழலுக்கான பாதுகாப்பை நீக்கியுள்ளது அரசாங்கம்



## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.29**
**75 ஆண்டுகளாக ஊழலுக்கும், குற்றங்களுக்கும் இருந்துவந்த அரசியற் பாதுகாப்பை தற்போதைய அரசாங்கம் நீக்கியுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அம்பாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மக்கள் விரோத ஊழல்களுக்கும், குற்றங்களுக்கும் இனி எந்தப் பாதுகாப்பும் இல்லை. அதனால் பயந்து குழப்பமடைந்தவர்கள் அரச சேவையிலும் உள்ளனர், பாதுகாப்புத் தரப்பிலும் உள்ளனர். முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கைது செய்யப்பட்டுள்ளார், முன்னைய ஆளும் கட்சியில் அமைச்சரவைப் பதவிகளை வகித்த பிள்ளையான் போன்றவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அரசாங்கம் இப்போது பொருளாதாரத்தை ஒரு ஸ்திரமான நிலைக்குக் கொண்டுவந்துள்ளது. அது பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# தமிழரின் அரசியல் அபிலாஷையை தேர்தலின்மூலம் பிரதிபலிப்போம்!

## எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு

வவுனியா, ஏப்.29
தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை அப்படியேதான் இருக்கின்றது. அதில் மாற்றம் இல்லை என்பதை நாட்டுக்கும், உலகுக்கும் சொல்ல உள்ளூராட்சித் தேர்தலைத் தமிழ் மக்கள் பயன்படுத்தவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
வவுனியா, புளியங்குளத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வவுனியா வடக்கில் போருக்குப் பின்னர் கடும் வேகத்தில் குடியேற்றச் செயற்பாடுகள் நடைபெறுகின்றது. மத்தியில் ஆளும் தரப்புக்கு இந்தப் பிரதேசசபையின் ஆட்சி அதிகாரம் சென்றால் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வேலையை மிக இலகுவாக நடைமுறைப்படுத்துவார்கள்.
உள்ளூரின் ஆட்சியை நாங்கள் தக்கவைக்க முடியாவிட்டால் தமிழ்மக்களின் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று, பரப்புரை செய்யக்கூடும். எங்களுக்குத் தேவையான தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷை அப்படியேதான் இருக்கிறது. அதில் மாற்றம் இல்லை வாக்குகளைச் சிதறடித்துவிட்டு அதைச் சொல்லமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-110)



# தமிழர்களின் வாக்கைக் கவர பொய்யை அள்ளிவீசும் அநுர

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

வடமராட்சி, ஏப்.29
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைக் கவருவதற்காக பொய்களை அள்ளிவீசும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கிளிநொச்சியில் துறைமுகம் அமைப்போம் என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.
வடமராட்சி மாலிசந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் பொய்களையே பேசுகின்றனர். தமிழர்களின் வாக்குகளைக் கவரவே இதைச் செய்கின்றனர். பொய்களை நம்பித் தமிழர்கள் பொய்களை நம்பாத தங்களுக்கு வாக்குப் போடுவார்கள் என்று நம்புகின்றனர். அந்த நம்பிக்கையை இந்தத் தேர்தலில் இல்லாமல் செய்ய மக்கள் முன்வரவேண்டும்-என்றார். (எ-100)

# தமிழர்களின் ஆதரவை தேர்தலில் காட்டவேண்டும்

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் ஒருமித்து வீட்டுச் சின்னத்துக்கு புள்ளடியிடுவதன் மூலம் வலுவான செய்தியை ஆட்சியாளர்களுக்கு உரத்துக்கூறவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.
குமுளமுனையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இங்குள்ள எமது பூர்வீக வழிபாட்டிடமான குருந்தூர் மலைக்காகவும், அங்கு இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், சைவ மக்களின் வழிபாட்டு உரிமைக்காகவும் தமிழ் அரசுக் கட்சியினரான நாமே தொடர்ந்து போராடுகின்றோம். எந்த பெரும்பான்மை இனத்தவர்களும் தமிழர்களுக்கு வாக்களிப்பதில்லை. ஆனால் தமிழ் மக்களில் சிலர் பெரும்பான்மையினக் கட்சிகளுக்கு வாக்களிக்கும் கலாசாரம் உள்ளது என்றார். (எ-33)



# அலிபாபாவும் 19 திருடர்களும் விலகினால் தமிழரசுக்கு விடிவு

## முன்னாள் எம்.பி. சிவமோகன் தெரிவிப்பு

வவுனியா, ஏப்.29
இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னோக்கிச் செல்லவேண்டுமானால் அலிபாபாவும் 19 திருடர்களும் விலகவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ஆயுதப் போராட்டத்தின் பின்னர் ஏனைய கட்சிகளை உள்வாங்கி விடுதலைப் போராட்டத்தை நடத்தவேண்டிய கட்சி தமிழரசுக் கட்சி. ஆனால் துரதிஷ்டவசமாக அந்தக் கட்சி இக்கட்டில் சிக்கியுள்ளது.
வழக்குகள் காரணமாக கட்சியின் பொதுக்குழு இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கட்சி அலிபாபா கையிலும் அவருடன் சேர்ந்த 19 திருடர்கள் கையிலும் மாட்டிக்கொண்டுள்ளது. அலிபாபாவும் 19 திருடர்களும் மனம் மாறவேண்டும், கட்சியின் பொறுப்புகளில் இருந்து விலகவேண்டும்.
அவர்கள் தேர்தலில் வென்று எதையும் சாதிக்கப்போவதில்லை. இது தான் உண்மை நிலைப்பாடு. இவர்களுக்கு இந்தத் தேர்தலில் மக்கள் பதில் கொடுப்பார்கள்-என்றார். (எ-110,18)

# தமிழரின் அடையாளத்தை விட்டுக்கொடுக்கமுடியாது



## சார்ள்ஸ் சுட்டிக்காட்டு

மன்னார், ஏப்.29
தமிழர்களான நாம் எம்முடைய அடையாளங்களுடன் இருக்கவேண்டும். தமிழ் மக்கள் மாற்றுக்கட்சிக்கு வாக்களிக்காது வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.
கடந்த வெள்ளிக்கிழமை நானாட்டான் பிரதேசத்தில் நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல்களுடன் உள்ளூராட்சித் தேர்தலை ஒப்பிடமுடியாது. இது உள்ளூராட்சித் தேர்தல், நானாட்டான் மக்களின் பிரதேசசபைத் தேர்தல். இது எங்களுடைய உள்ளூர் அரசு. எமது ஆட்சியையும், அடையாளத்தையும் நாங்கள் ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது. நானாட்டான் பிரதேசசபை தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவத்துடன் செயற்படவேண்டும். அதற்கு அனைவரும் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-41-58)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

### யா அருணோதயக் கல்லூரி அளவெட்டி
விஞ்ஞானப் பிரிவு
செல்வன் தக்சன் 3ஏ
கணிதப்பிரிவு
சியானுசன்3ஏ, சோபிதரன்3,
கலைப்பிரிவு
சுலக்சிகா 3ஏ , யோ.கோபிநாத் 3ஏ, பவஸ்ரனா 3ஏ

### சென். சேவியர் ஆண்கள் கல்லூரி
விஞ்ஞானப் பிரிவு
எஸ்.ஆகாஷ் 2ஏபி, ஜ.எரிக் 2ஏசி
என்.பிரதீஸ் ஏ2பி, எஸ்.பௌல் ஏபிசி, யே.சறோன் ஏபிசி, ஜி.அபிஷேக் பி2சி,எஸ்.டொன்மிகா பி2சி, சி. விஷால் பிசிஎஸ்,டி.அக் ஷயன் 3சி,ஏ.றினிரன் 2சிஎஸ்,எல்.பிருந்தன்3சி

பௌதீகவியல் விஞ்ஞான பிரிவு
எஸ்.எட்றிக் 3ஏ, எ.டெவைன்3ஏ, பி.போவாஸ்3ஏ, எஸ்.டனிஸ்3ஏ, எம்.அஸ்லி ஏ2சி,ஏ.அன்சியன் பி2சி,கே. கவிசன்3சி,பி.பவிந்தன்3சி,பி.அபிஷேக் 2சிஎஸ்,எஸ். றொபிசேக் சி2எஸ்,ஏ.பினகாஷ் 2சிஎஸ்,எஸ்.சிகான் சி2எஸ்,யே.நிமேஸ்3எஸ், யே.றொக்சன் 3எஸ்,ஏ.மனோஜ் 3எஸ்,யே.எஸ்றோன் 3எஸ், எம்.கிஷான் 3எஸ், ஏ.றதீஸ்சன்3எஸ்

பொறியியல் தொழிநுட்பப் பிரிவு
யே.பியோய் 2சிஎஸ், அன்ரன் நினாஸ் 2சிஎஸ்

வர்த்தகத்துறை பிரிவு
ஏ.புவின்றாஜ் 2பிசி,

### யாழ். இந்துக்கல்லூரி
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
ஜமுனானந்தா பிரணவன் 3ஏ, ஜமுனானந்தா சரவணன் 3ஏ, ராஜன் அபிராம் 3ஏ, சிறிசுந்தரராஜா ஸ்ரீகாந்த் 3ஏ, டெனி கொன்ஸ்ரன்ரைன் லொஹான் ஸ்ரென்விஜ் 3ஏ, சதீஸ்குமார் லதீசனன் 3ஏ, ஜெசிதரன் லதுர்சன் 3ஏ, சிவயோகன் விஷ்ணுஜன் 3ஏ, சிவரஞ்சன் மாதுளன் 3ஏ, முரளிமோகன் மிருணளன் 3ஏ, சிவகுமாரன் சங்கீதனன் 3ஏ, சோதிநாதன் வசீகரன் 3ஏ, தேவானந் ஆனந்தராம் 3ஏ, சாந்தகுமார் கவின் 3ஏ, ரமணீதரன் ரதுக்சன் 3ஏ, சந்திரமோகன் சங்கீதன் 3ஏ, விஜயகுமார் ஆகாஷ் 3ஏ, லட்சுமிகாந்தன் லிசோகன் 3ஏ, சுபாஷ்கரன் கஜாணன் 3ஏ, கிருஷ்ணவசீகரன் தீனுசன் 3ஏ, கணநாதன் தருண் 3ஏ, விக்னேஷ்வரமூர்த்தி பரத்வாசன் 3ஏ, சிவஞானம் துளசிகன் 2ஏ பி, சுகந்தன் சபிஷன் 2ஏ பி, சுபாஷ்கரன் கஜன் 2ஏ பி, நவரத்தினராசா நிருத்திகன் 2ஏ பி, சிவகுமார் ஹரீசான் 2ஏ பி, உதயதரன் கிருபரன் 2ஏ பி, சாந்தகுமாரன் கலியுகன் 2ஏ பி, கருணாகரன் மயூரேஷ் 2ஏ பி, சுதன் விஷ்ணு 2ஏ பி, பரமானந்தம் நிகேசன் 2ஏ சி, கேதீஸ்வரன் காரிஜன் 2ஏ சி, அன்ரனிசில்வா டனுசன் 2ஏ சி, மகேஷ்வரன் கஜன் 2ஏ சி

பௌதீக விஞ்ஞானப் பிரிவு
மலர்வண்ணன் அகரன் 3ஏ, சதீஸ்குமார் அபிசகேதிவர் 3ஏ, குருபரன் சங்கரன் 3ஏ, றெஜினோல்ட்ஸ்கரன் ஜெருஷன் 3ஏ, சுரேந்திரநாதன் லாவண்யன் 3ஏ, சிறீஸ்கந்தராசா கஜலக்சன் 3ஏ, அன்ரனிஜோர்ஜ் பிரின்ஸியம் 3ஏ, பரமேஸ்வரன் சுடரழகன் 3ஏ, செல்வநாயகம் தமீசன் 3ஏ, சண்முகனேசன் குணாளன் 3ஏ, சுஜீவகுமார் சிவேதயன் 3ஏ, செந்தில்குமார் நிதர்சன் 3ஏ, சத்தியசீலன் தேனுஜன் 3ஏ, ஜெகதீசன் ஆர்த்திகன் 3ஏ, ஜெயபாலன் துஷியந் 3ஏ, குகநாதன் டிரோசென் 3ஏ, சிறிகிருஷ்ணகாந்தன் புதுமிகன் 3ஏ, கணேஷ்வரன் அனுசன் 3ஏ, முருகானந்தன் சங்கமன் 3ஏ, விக்னராஜா திரேஷன் 3ஏ, தவபாலன் பகீரதன் 3ஏ, கிருபாகரன் பிரணவன் 3ஏ, அருள்நேசன் மகிந்தன் 3ஏ, ரவிச்சந்திரன் சோபிதன் 3ஏ, நிரஞ்சன் சாகித்தியன் 3ஏ, புவனேந்திரன் சஞ்சீவன் 3ஏ, கோபாலகிருஷ்ணன் கஜதக்சன் 3ஏ, சிவகுமாரன் அபினாஷ் 2ஏ பி, நக்கீரன் ஆதித்தியன் 2ஏ பி, முகுந்தன் பிரணவன் 2ஏ பி, ஹெய்ஞ்சர்லஸ் ஹெட்ரியன் 2ஏ பி, சந்திரகாந்தன் நந்தலாலன் 2ஏ பி, ராசேஷ்வரன் மகிழ்ரஞ்சன் 2ஏ பி, விஜயசந்திரன் சிறிகஜன் 2ஏ பி, செல்வமகேசன் அபிரூபன் 2ஏ பி, பிரணவசொருபன் குருஷேத்திரன் 2ஏ பி, புஷ்பராஜ் கிருஷாந் 2ஏ பி, பரஞ்சோதி விஷ்ணுஜன் 2ஏ பி, சரவணபவன் செரோன் 2ஏ பி, தயாபரகுருக்கள் யதுசனன் 2ஏ பி, அரவிந்தன் அபேர்நாத் 2ஏ பி, உதயதேவன் 2ஏ சி, சதாநந்தன் யுஜிந்தன் 2ஏ சி

பொதுப் பிரிவு
ஜெயமோகன் பபிசன் 3ஏ, ஜெயராசன் அபிநயன் 3ஏ, ரகுமார் தருண் 3ஏ, சிறிதரன் தர்மிகன் 2ஏ பி

வணிகப் பிரிவு
விஜயசுந்தரம் வரணன் 3ஏ, காந்தரூபன் சஞ்சய் 2ஏபி, குகநாதன் மிதுனன் 2ஏ சி

உயிரியல் தொழில்நுட்பம்
ஜெகதீஸ்வரன் துஷாந் 3ஏ

இயந்திரவியல் தொழில்நுட்பம்
சற்குணராசா சந்தோஷ் 3ஏ

கலைப் பிரிவு
முருகமூர்த்தி நயனன் 2ஏ பி,
யோகசீலன் சாருஜன் 2ஏ பி

### யாழ். வரணி மத்திய கல்லூரி
பௌதீக விஞ்ஞானப் பிரிவு
க. அரவிந்தன் 3ஏ, இ.நிகாஷ் ஏ2பி, கி.தசாணா ஏ,பி,சி, வ.கவினா பி, 2சி, த.சஜிந்தன் 3சி, சி.சாருசன் 3எஸ், வே.ஜிந்துசா 3பி, சூ.வேணுசன் பி 2சி

உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
த. தினேஸ் சி2எஸ், சி. நிருசன் சி2எஸ்,

வர்த்தகப்பிரிவு
இ.பர்சிகா ஏ2சி, கு. சாருஜா ஏ,பி,சி,

கலைப்பிரிவு
க. டனுசியன் 3ஏ, க. விதுஷா 3ஏ, சு. சுரேகா 3ஏ, ஜெ. தனுஸ்ஸன் 3ஏ, பா. வினோயா 3ஏசி.நிலாஜினி 2ஏபி, க.நிவேதிகா 2ஏபி,யோ.அபிராமி 2ஏபி,கு.யசோதா ஏ2பி, ந.செவ்வந்தி ஏபிசி, அ.லாவண்யா ஏபிசி, ஞா.கிஸ்ணா 3பி, லி.பானுகா ஏசிஎஸ், வி.புவனேகா 2பிசி, க.ஆர்மிதா பி2சி, வி.கமிலன் பிசிஎஸ், ரு.வினுசன் பிசிஎஸ்பா, நிதர்சா பிசிஎஸ்ச, லக்சனா பி2எஸ்,

### யா/ ஹாட்லி கல்லூரி
கணிதத்துறை
கந்ததாசன் தர்சத் 3ஏ, யோகேந்திரன் அர்ணிகன் 3ஏ, ஜெயசந்திரன் நிவேதன் 3ஏ, ஜெயகுமார் நிவீதிகன் 3ஏ, நிர்மலன் சலீன் 3ஏ, அன்ரன் ஜேசுராசா ஜுட் பிரியதர்ஷன் 3ஏ, சிவனேசன் அர்ணிகன் 3ஏ, ராமேஸ்வரம் சதுர்சன் 3ஏ, சிவரஞ்சன் தனோஜ் 3ஏ, அஞ்சனகுமார் ஷாகிஞ்சை 3ஏ, முருகானந்தன் சாருஜன் 3ஏ, ரகு சரவணன் 3ஏ, நாகேஷ்வரன் கிஷ்ணமேனன் 3ஏ, ஜெயகுமார் விஷ்ணுராஜ் 3ஏ, சுபாகு அட்சயன் 3ஏ, மோகன் அர்ஜுன் 3ஏ, சுப்ரமணியம் அர்ஜுன் 3ஏ, குகநாதன் வைகுந்தன் 3ஏ, ஸ்ரீலயந்திரா அஞ்சனன் 3ஏ, முருகமூர்த்தி பிரவீன் 3ஏ, கஜேந்திரன் ஸ்னேகன் 3ஏ, சண்முகதாஸ் கீர்த்தி 2ஏ பி

உயிரியல் பிரிவு
கிருபாகரன் கஜீவன் 3ஏ, சந்திரபபா மதுசன் 3ஏ, உதயகுமரன் மதுமிதன் 3ஏ, வித்யாபதி ஹர்சன் 3ஏ, சுபேந்திரன் தினேஷ் 3ஏ, தேவதாஸ் தேவானந்தா 2ஏபி, திருச்செல்வம் கௌதம் 2ஏ பி

இயந்திரவியல் தொழில்நுட்பம்
கிரீபரூபன் ஜனார்த்தன் 3பி, நீதிராஜ் நிதுஜன் 2பி சி, தயாபரன் மதிவாணன் 2பி சி, ஜில்பேர்ட் யோகராசா கியூபேட் கிருஷனன் 2பி எஸ், அகிலரூபன் கவீசன் பி 2சி
வணிகப் பிரிவு
தங்கவேல் அனுசன் 3ஏ

கலைப் பிரிவு
சுப்ரமணியம் மதுசன் 3ஏ, சந்திரசேகரம் நிதர்சன் 2ஏ பி
(27)

## வவு/ நெளுக்குளம் ம.வி. மாணவி வர்த்தகப் பிரிவில் முதலிடம்



வவுனியா, ஏப். 29
2024 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மாணவி பிதுர்சா சற்குணம் வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பிடித்து சாதனைபடைத்துள்ளார். அவர் தேசிய ரீதியில் 357 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். (ச-110)

## மன்னார் சித்திவிநாயகர் இந்து மாணவி கலைப்பிரிவில் சாதனை



மன்னார், ஏப். 29
2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஜெயந்தன் பவதாரணி கலைப்பிரிவில் முதலிடம் பிடித்து சாதனைபடைத்துள்ளார். அவர் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 84 ஆவது இடத்தையும் பெற்று மன்னார் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். (ச-இ)

### இயந்திரவியல் தொழில்நுட்பப்பிரிவில்
## யாழ். மத்திய கல்லூரி மாணவன் யாழ்.மாவட்டத்தில் முதலிடம்



2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவனான வியாகர்ணன் பிரவீன் இயந்திரவியல் தொழில்நுட்பப் பிரிவில் மாவட்ட ரீதியாக முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியாக 97 ஆவது இடத்தையும் பெற்று சாதனைபடைத்துள்ளார். அவர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏ சித்தியையும், தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானத்தில் ஏ சித்தியையும், இயந்திரவியல் தொழில்நுட்பத்தில் பி சித்தியையும் பெற்றுள்ளார். (ச-27)

## வவு. முஸ்லிம் ம.வி. மாணவி கலைப்பிரிவில் முதலிடம்



2024 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மாணவி முகம்மது பைசல் பாத்திமா அஸ்ரா மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்று சாதனைபடைத்துள்ளார். தமிழ், அரசியல், பொருளியல் ஆகிய பாடங்களில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் [illegible] ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகளை நிரூபித்துக் காட்டுக!

## அரசாங்கத்துக்கு பெரமுன சவால்

கொழும்பு, ஏப்ரல் 29
நாட்டில் பெரியளவில் ஊழல், மோசடிகள் இடம் பெற்றதாக தேசிய மக்கள் சக்தி பரப்புரை செய்கின்றது. எனவே, விமர்சனங்களை மட்டும் முன்வைக்காமல், இவை தொடர்பில் விசாரணை நடத்தி உண்மையை வெளிப்படுத்த வேண்டும். இதை ஒரு சவாலாக அரசாங்கம் எடுக்க வேண்டும் இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொய்கள் மற்றும் வன்மங்களை விதைத்தே தேசிய மக்கள் சக்தி பிரச்சாரம் செய்தது. போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. தற்போது ஆட்சி அதிகாரம் கிடைத்தும் பழைய பாணியிலேயே பரப்புரைகளை முன்னெடுக்கின்ற னர். ஆட்சியும் உங்களிடம் உள்ளது. அதிகாரமும் உங்களிடம் உள்ளது. எனவே, ஊழல்களும் மோசடிகளும் இடம்பெற்றிருந்தால், அவற்றை நிரூபித்துக் காட்டுங்கள். இதை ஒரு சவாலாக அரசாங்கத்துக்குக் கூறிக்கொள்கின்றோம். வேகமாக வளர்ச்சியடைந்த நாட்டை தேசிய மக்கள் சக்தியே நாசமாக்கியது. இதற்காக 'பொய்' எனும் ஆயுதம் பயன்படுத்தப்பட்டது-என்றார். (ம44)

# மருத்துவர் ஷாபியின் மகள் சாதனை

பெண்களுக்கு சட்டவிரோதக் கருத்தடை செய்தாரெனவும் வருமானத்துக்கு அதிகமாக சொத்தைக் குவித்தாரெனவும் போலியான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட மருத்துவர் ஷாபி ஷிஹாப் தீனின் கள் 2024 கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் உயிரியல் பிரிவில் மிகத்திறமையாக சித்தியெய்தியுள்ளார்.

தந்தை எதிர்கொண்ட நெருக்கடிகளைத் தொடர்ந்து கடும் மன அழுத்தங்களை எதிர்கொண்டதால் தான் கல்விகற்றுக் கொண்டிருந்த பாடசாலையிலிருந்து விலகவேண்டிய நிலையை எதிர்கொண்டார். இருந்த போதிலும் அவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சை எழுதி தனது மன உறுதியை வெளிப்படுத்தியுள்ளார். இவர் உயர்தரப்பரீட்சையில் உயிரியல் பிரிவில் 3 ஏ பெற்றுள்ளார். (ச-இ)

## மணமகன் தேவை

யாழ் இந்து 1972 அச்சுவினி நட்சத்திரம் (P) விவாகரத்தான அழகிய மகளுக்கு வாழ்க்கைத் துணையைத் தேடுகிறோம் 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
தரகர் தேவையில்லை .

T.P : 075 480 8768

## பெயர் மாற்றம்

நாவலடி இமையாணன் மேற்கு உடுப்பிட்டியில் வசிக்கும் குழந்தையன் ரோகினி ஆகிய நான் எனது பெயரை **குழந்தையன் யோகராணி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **குழந்தையன் யோகராணி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**குழந்தையன் யோகராணி**

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16 . 07 . 1987

மறைவு
21 . 04 . 2023

### அமரர் ஜெயந்திரன் நிஜந்தன்


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இரண்டாண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

வட்டக்குளம், கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம்

(CS/58088) J-1

குடும்பத்தினர்
077 103 2663

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
28 . 12 . 1952

மறைவு
30 . 03 . 2025

கடந்த (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

### அமரர் சின்னையா இராசரத்தினம் (தவம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (29.04.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து துக்கத்தில் பங்கு கொண்டும், நேரிலும், தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்தும் மேலும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாகம்மாள் கோவில் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(CS/58119) J-1

குடும்பத்தினர்
077 974 9343

## மரண அறிவித்தல்



தோற்றம்
24 . 05 . 1936

மறைவு
27 . 04 . 2025

### அமரர் ருக்மணிதேவி நல்லநாதன்

**(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)**

கரம்பனைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ருக்மணிதேவி நல்லநாதன் அவர்கள் நேற்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நல்லநாதன் அவர்களின் அன்புத் துணைவியும், அமரர். கோணேசலிங்கம், அமரர். மகாலிங்கம், சத்தியபாமா, மகேந்திராதேவி ஆகியோரின் சகோதரியும், பாக்கியலோஜினி, சசிகலா, நந்தகுமார், நளாயினி ஆகியோரின் பாசமிகுத்தாயாரும் சிறீதரன், மோகனராசா, தயாளகுணநாதன் ஆகியோரின் மாமியாரும், ஸ்டீஷன், சிமந்தா, திவ்யா, தனிக்கா, ஜெனட், மார்வின், ஜோசுவா, சுருதினி, லக்ஷி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், றுக்காயா, வீடோன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை மறுநாள் (01.05.2025) அன்று காலை 7.00 மணி முதல் மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
தயா 077 684 9140

(CS/30088) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவைச் சங்கத்தால் வடமராட்சியில் உதவித்திட்டம்



யாழ்ப்பாணம், ஏப்.29

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஏற்பாட்டில் ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன் ஆகிய கிராமங்களில் கடந்த ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 85 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு, யாழ். வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தில் நிவாரணப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் விருந்தினர்களாக வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகர மூர்த்தி, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் ச.திரவியராசா, ஆளுநர் சபை உறுப்பினர் ந.நாகேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-22,27)



மிருசுவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கு மிருதங்கம் ஒன்று அன்பளிப்பாக கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. வித்தியாலயத்தின் பழைய மாணவி தனது தாயாரின் நினைவாக 36 ஆயிரம் ரூபா பெறுமதியான மிருதங்கத்தை பாடசாலைக்கு வழங்கியிருந்தார். (ச-25,9)


## மரண அறிவித்தல்



### சின்னத்துரை தனேந்திரன் (இந்தி)

(ஓய்வுநிலை உதவி நில அளவையாளர்)

கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தனேந்திரன் அவர்கள் நேற்று (28.04.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருஞானம் மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற வனிதா அவர்களின் அன்புக் கணவரும், பிரசாந்தா (பட வரைஞர்), திவ்வியா (யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை), துஷ்யா (யாழ் மாவட்ட சி.க.கூ சங்கங்களின் சமாசம்-வெளிக்கள அலுவலர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராகுலன் (முகாமையாளர்), வர்ணன் (ஊடகவியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கருணிகாவின் அன்புப் பேரனும், ரஜனி, காலஞ்சென்றவர்களான சிரோன்மணி, ஜெயேந்திரன், நிர்மலேந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2025) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 603 8507
077 806 9611
077 629 1102

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பல ஆண்டு காலம் பணியாற்றி உறுதுணையாகவிருந்த

**வினாயகம்பிள்ளை சதாசிவம்**
(பண்டிதர்)


அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சிறாம்பியடி
யாழ்ப்பாணம் ஓட்டோசப்பிளையர்ஸ்

(CS 3059) V-1

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 27 . 11 . 1953



உதிர்வு 06 . 04 . 2025

கடந்த (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அருமைக் குடும்பத் தலைவர்

**அமரர் செல்வநாயகம் சற்குணாநந்தம் (சற்குணம்)**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் நாளை (30.04.2025) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்றையதினம் முற்பகல் 11.30 மணியளவில் தனங்கிளப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைதொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
070 228 6711

(CS/58118) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 03 . 1948



மறைவு 28 . 04 . 2025

### திருமதி தெட்சனாமூர்த்தி சிவபாக்கியம்

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், காளிகோவிலடி, களபூமி காரைநகரையும் தற்போது இல.27 அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெட்சனாமூர்த்தி சிவபாக்கியம் அவர்கள் நேற்று (28.04.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகையா-செல்லம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-பார்வதி தம்பதியின் பாசமிகு மருமகளும் தெட்சனாமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி (சிற்றிபாமர் ஸ்ரேட்), தயாபரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பூபதி, சுப்பிரமணியம் (இளைப்பாறிய P.D மாகாண விவசாய பணிப்பாளர்-வடமாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாமினி, உமாதேவி (இளைப்பாறிய ஆசிரியர்-யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரி), காயத்திரி (DO-பிரதேசசெயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஜலக்சிகா, ஹரிஸ், வாகீசன், சாருஜன் (லண்டன்), ஜதுசன், அஸ்மிதா, டினோஜன் ஆகியோரின் அன்புப் போர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் இல.27, அரசடி ஒழுங்கை வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல.27, அரசடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்,
077 981 3037
021 221 9861
Whats App No-077 348 4992


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிசபைத் தேர்தலின் தபால்மூல வாக்களிப்பு அண்மையில் இடம்பெற்ற நிலையில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணதிலகவின் கண்காணிப்பின்கீழ் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றது. (ச-27)

# வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த பொறிமுறையை உருவாக்குக!

## வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஏப். 29

**வடக்கு மாகாணத்தில் 'வெள்ளை ஈ' தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பல தடவைகள் கலந்துரையாடப்பட்டபோதும் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே பெரும் வாழ்வாதாரப் பாதிப்புகளை உண்டுபண்ணும் வெள்ளை ஈயை முழுவீச்சில் கட்டுப்படுத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணத்தில் 'வெள்ளை ஈ' தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தென்னையை வாழ்வாதாரமாகக் கொண்டு வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெள்ளை ஈ தாக்கம் பரவியபோது எடுக்கப்பட்ட முயற்சிகளின் அளவைக்கூட இப்போது காணமுடியவில்லை என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது வடக்கு மாகாண விவசாயத்திணைக்களத்தால் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கு சில முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக அதன் பணிப்பாளர் ஆளுநரிடம் குறிப்பிட்டார்.

இதுகுறித்து தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் ரி.வைகுந்தன் தெரிவிக்கையில், இலங்கை முழுவதும் வெள்ளை ஈ தாக்கம் இருந்தாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே இதன் தாக்கம் அதிகம். எனவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணமே கூடுதல் அக்கறை எடுத்து இதனைக் கட்டுப்படுத்த முயற்சிக்கவேண்டும். தற்போது வெள்ளை ஈ யைக் கட்டுப்படுத்துவதற்கு வேப்பெண்ணை, சோர்வக்ஸல் கரைசலைப் பயன்படுத்தி தென்னை ஓலையின் கீழ்ப்பகுதியைக் கழுவும் செயற்பாடு 2 அல்லது 3 வாரங்களுக்கு ஒருதடவை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது.

இதனை முன்னெடுக்கும்போது அந்தப் பிரதேசத்திலுள்ள அனைத்துத் தென்னை மரங்களிலும் செய்தால் மாத்திரமே அது உரிய வெற்றியைத்தரும். அதேநேரம் இயற்கைமுறையில் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுவருகின்றன.

அதற்கமைய உடனடியாகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகம் பாதிப்புக்குள்ளான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு அங்கு மாதிரிச் செயற்பாடுகளை மக்களுக்கு செய்துகாட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. (ச-27)



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலி.கிழக்குப் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் அமரர் இலகுநாதன் செந்தூரனின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக் காரியலத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-41-125)



## சிறுவர் சந்தை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 29

அராலி இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலையின் பொறுப்பாசிரியர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்டச் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கல்பனா கலந்து சிறப்பித்தார். (ச-25, 27)

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 29

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் சஞ்சிகையின் 328 ஆவது சித்திரைமாத இதழ் வெளியீடும், மாணவர்களுக்கான புதிய துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வும் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ச-25, 66)



## மக்கள் வங்கி சேவை நிலையம் புதிய இடத்துக்கு மாற்றம்

மக்கள் வங்கி அண்மையில் தனது பலாலி சேவை நிலையத்தினை மயிலிட்டியில் அமைந்துள்ள புதிய கட்டடத்திற்கு இடமாற்றம்செய்ததுடன் யாழ்.பிராந்தியத்தில் அதன் சேவைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது. புதிய இடத்தில் மேம்பட்ட வசதிகள் மற்றும் அதிநவீன டிஜிற்றல் வங்கிச்சேவை என்பனவற்றோடு தடையற்ற திறமையான நட்புரீதியான வங்கி அனுபவத்தை வாடிக்கையாளர் பெறும்வகையில் மேலும் உறுதிசெய்துள்ளது. இவ் அங்குரார்ப்பண வைபவத்தில் மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் ரா.ரவிகரன், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழைப் பிரதேச செயலர் திருமதி சி.சுதேஸ்ணர், மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் மு.மதியழகன், உதவிப் பிராந்திய முகாமையாளர்களான திருமதி யா.சுரேஸ்குமார், த.பாரத்மணா, சுன்னாகம் கிளை முகாமையாளர் அ.சதீஸ் மற்றும் தே.ரஜீவன் சேவைநிலைய முகாமையாளர், ஏனைய கிளை முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள், அரச உத்தியோகத்தர்கள், பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41)



## வாக்கெண்ணும் பணிகள் முன்னாயத்தச் செயலமர்வு!

யாழ்ப்பாணம், ஏப்.29

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் தொடர்பாக அஞ்சல் வாக்கெண்ணும் அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு யாழ். மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது அஞ்சல் வாக்கெண்ணல் அலுவலர்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படவுள்ள சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உதவித்தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் விளக்கமளித்தார். (ச-25,27,125,9,66)



பளைப் பிரதேசசபைக்கான

## தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைக்கான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீட்டு நிகழ்வு சபையின் முன்னாள் தவிசாளரும், வேட்பாளருமான சுப்பிரமணியம் சுரேன் தலைமையில், முள்ளிப்பற்று வட்டாரத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சிப் பிரதேசசபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கட்சியின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைக்கான வேட்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-25,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது. மாலையில் குடும்பத்துடன் தெய்வ வழிபாடு செய்வீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் வழக்கம்போல இருக்கும்.

**இடபம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச்செல்வது நல்லது. அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** மனதில் வீண்குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை எளிதில் முறியடிப்பீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உங்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். அவசியமின்றி வெளியில் செல்வதைத் தவிர்க்கவும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டா கும். தாயின் உடல் நலனில் கவனம்செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்களால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகள்வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**மகரம்:** தாய்வழிஉறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித்தருவீர்கள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத் துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

## வர்த்தக...

பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

எந்தப் பொருளாதாரப் புயலாலும் பாதிக்கப்படாத வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்பவேண்டியது இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய விடயமாக உள்ளது. அமெரிக்காவின் வரி விதிப்புகள் செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரிக்கும். மிகவும் வறிய நாடுகள் மோசமான தாக்கத்தை எதிர்கொள்ளும்.

மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடு என்ற வகையில் அபிவிருத்திக்கான இலங்கையின் உரிமை குறைமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பலவீனமான பொருளாதாரத்தின் மீது அதிகளவு அழுத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன. அமெரிக்கா தனது மேலாதிக்கத்தையும், அதிகார அரசியலையும் முன்னெடுப்பதற்காக வரிகளை பயன்படுத்துகின்ற சூழ்நிலையில், இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கவும், உலகளாவிய வர்த்தகப் பதற்றங்களை எதிர்கொள்வதற்கும் சீனா முழுமையான உதவிகளை இலங்கைக்குச் செய்யும்.

உலகளாவிய கண்டனங்களை மீறி அமெரிக்கா ஒரு வரிப்போரை முன்னெடுக்கின்றது. ஆதலால், உலகம் கொந்தளிப்பான புதிய காலகட்டத்தில் நுழைகின்றது. ஆனால், ஒருதலைப்பட்சமான இந்தப் பொருளாதாரப் போக்குகளை அடியோடு நிராகரிப்பதற்கான திறன் சீனாவுக்கு உள்ளது. இந்தப் புதிய பொருளாதாரப் போக்குகளுக்கு எதிராக வெற்றிபெறக் கூடிய நம்பிக்கையும் சீனாவிடம் இருக்கின்றது.

கொந்தளிப்பான உலகத்தை எதிர்கொள்ளும் இலங்கையும், தனது சொந்த சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களை இன்னமும் உறுதியாகப் பாதுகாக்க வேண்டும். சீனா மிகவும் நம்பகரமான சகா என்பதை இலங்கை நம்பவேண்டும். அமைதி மற்றும் வளர்ச்சியின் போக்கை பின்பற்ற வேண்டும். மேலும் புவிசார் அரசியல் கூட்டு மோதல்களையும் ஒரு தலைப்பட்சவாதத்தையும் இலங்கை எதிர்க்கவேண்டும்-என்றார். (அ-ம-இ)

## மே மாதம்...

செம்மணி சிந்துபாத்தி மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது, மனிதச் சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன. அந்த மனிதச் சிதிலங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலைசெய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நீதவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப்பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான நிதி மத்திய அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது அகழ்வுப் பணிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவுக்குவந்துள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வின்போது அமைக்கப்பட்டதைப் போன்று 30 அடி அகலமும் 100 அடி நீளமும் உள்ள கொட்டகை செம்மணி மனிதச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுவருகின்றது.

அவற்றுக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பணிகள் முன்னெடுக்கப்படும் வேகத்தின் அடிப்படையில் மே மாதத்தில் மத்திய பகுதியில் அகழ்வுப்பணிகள் ஆரம்பமாக வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. (அ-ம-26)

## தவறான...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

(அ-ம-26-100-20-27)

## சஜித்தை...

போது, 'எதிர்வரும் டிசெம்பர் மாதம் சஜித்தை ஜனாதிபதியாக்கும் வகையில் நகர்வுகள் இடம்பெறுகின்றன' என்று வெளியாகும் தகவல்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலில் சிறந்த பெறுபேற்றை பெற்ற பின்னர் கூடிய விரைவில் சஜித்தை ஜனாதிபதியாக்குவதற்கே முயற்சிக்கின்றோம். மாதக் கணக்கு என்பது முக்கியம் அல்ல. அடுத்த மாதம் ஜனாதிபதி பதவிக்கு அவரைக் கொண்டுவரமுடிந்தால் கூட அதனைச் செய்வோம்.

எனினும், அதற்கென நடைமுறைகள் உள்ளன. பலவந்தமாக ஆட்சியைப் பிடிக்க முடியாது. நாட்டு மக்கள் உணர்ந்த பின்னர், மக்களின் விருப்பத்தின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தி அரியணையேறும். அரசாங்கம் வெறும் ஏழு மாதங்களில் மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளது. தவறு நடந்துள்ளது என்பதை மக்கள் உணர்ந்து, அதனைச் சரிசெய்வதற்கு முற்படுவார்கள். எனவே, மக்களின் நம்பிக்கையுடனும் ஆசியுடனும் ஜனாதிபதியாக சஜித் தெரிவாகுவார்-என்றார். (அ-ம-44)

## வவுனியா...

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி, பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன், மனைவி ஆகிய இருவர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த இரட்டைக் கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஆறு பேர் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்தி ருந்த நிலையில், சந்தேகநபர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த மார்ச் மாதம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, சந்தேகநபர்கள் சார்பில் பிணை மனுவை சமர்ப்பித்திருந்தார்.

அதற்கு ஆட்சேபனை வெளியிட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தினர் பிணை வழங்குவதற்க்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு வாதங்களை முன்வைத்திருந்தனர். இருப்பினும் சட்டமா அதிபர் திணைக்களத்தால் விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால், சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கலாம் என நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைவாகவே முதலாம், மூன்றாம், நான்காம், ஆறாம், ஒன்பதாம் இலக்க சந்தேகநபர்கள் ஐந்து பேருக்கும் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டது. சந்தேகநபர்கள் அனைவரும் மாதாந்தம் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிக்கு இடையிலான நேரத்தில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் தமது வரவை பதிவு செய்யவேண்டும் எனவும் நீதிமன்றத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-18-110)

## தபால்...

ளாதவர்களுக்கு நேற்றும், இன்றும் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. இதன்படி, இன்றுடன் தபால் மூல வாக்களிப்பு நிறைவுக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய தினத்துக்குப் பின்னர் மேலதிக நாள் எதுவும் தபால் மூல வாக்களிப்புக்காக ஒதுக்கப்படாது என்று தேர்தல் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

(அ-ம-இ)

## முறைப்பாடு...

குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 21 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 34 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 221 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒப்பந்தம் ஏன் பகிரங்கப்படுத்தப்படவில்லை?

## பெரமுன கேள்வி

கொழும்பு, ஏப். 29

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்தினால் வாக்கு வங்கி முழுமையாகச் சரியும் என்பதாலேயே அவற்றை அரசாங்கம் மறைத்து வருகின்றதா என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.

தனியார் ஊடகமொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வொன்றில் பங்கேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மொட்டுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டிவி சானக மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை தகவல் அறியும் சட்டத்தின்கீழ் நாம் கோரியுள்ளோம். உரிய காலப்பகுதிக்குள் அவை வழங்கப்படவில்லை. இதன்மூலம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தையும் அரசாங்கம் மீறியுள்ளது.

பாதுகாப்பு, வலுசக்தி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட ஏழு ஒப்பந்தங்களும் நாட்டுக்கு நன்மையபக்கும் ஒப்பந்தங்கள் எனில் அரசாங்கம் அவற்றை பகிரங்கப்படுத்தாமல் இருப்பது ஏன்? மேற்படி ஒப்பந்தங்களை வெளியிட்டால் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி மீண்டும் 3 சதவீதத்துக்கு செல்லக்கூடும். அதனால்தான் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படாமல் உள்ளதா- என்றார். (சு-44)

**வேலையாள் தேவை**

தேவை { மேசன், கூலி, வெல்டர்

தொடர்பு: 076 660 1600

**காணியும் வீடும் விற்பனைக்கு**

புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவிலில் 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

077 674 2013

**வீடு வாடகைக்குத் தேவை**

4 பேர் தங்குவதற்கு ஏற்ற வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. இடம் யாழ் நகரை அண்டிய பகுதியில் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 486 1586

**வேலையாட்கள் தேவை**

கொழும்பு மற்றும் யாழ் நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர் (உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்)

(CS 3055) V-1

தொடர்பு:- 076 440 8953

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 02.04.2025 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் சண்முகம் நவரத்தினம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.04.2025) புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் 02.05.2025 வெள்ளிக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி,
ஆவரங்கால்.

குடும்பத்தினர்
077 669 9687

(CR/44868) J-1

**TECHNO WORLD**

TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)

A/L தொழில் நுட்பப் பிரிவு

10 வது ஆண்டில் தடம் பதிக்கிறது.

இம்முறையும் மாவட்ட, தேசியரீதியில் முன்னிலையில்

**பொறியியல் தொழில்நுட்பவியல்**

| Name | Rsultse | Rank | Name | Rsultse | Rank | Name | Rsultse | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01. Piraveen | 2AB | 1 Jaffna | 12. Banushan | 3B | 9 | 23. Yakeeshan | B2C | 26 |
| 02.Annon | 2AB | 1Mannar | 13. Sathya | B2C | 9 | 24. Venujan | A2C | 27 |
| 03.Abiram | ABC | 1Kilinochchi | 14. Mathumini | 3C | 9 | 25. Yuveskar | B2C | 31 |
| 04.Kokul | 2AC | 2 Vavuniya | 15. Pirajalan | 3C | 10 | 26. Sakithiyan | 3C | 34 |
| 05.Pranavan | 2AB | 3 Jaffna | 16. Majurathan | 3B | 11 | 27. Anfas | 3C | 39 |
| 06.Jinusikan | 3C | 3 Mullaitivu | 17. Vithushan | ABC | 15 | 28. Papylon | B2C | 40 |
| 07. Kiruthika | B2C | 5 | 18. Dilaxsan | 3B | 18 | 29.Thanosikan | B2C | 41 |
| 08. Jenarthan | 3B | 6 | 19. Sathursan | C2S | 19 | 30. Thanushan | B2C | 49 |
| 09. Saroban | BCS | 7 | 20. Narmathan | C2S | 20 | 31. Mathurshan | B2C | 53 |
| 10. Thanocika | C2S | 8 | 21. Banushan | 2BC | 22 | 32.Kirusikan | ACS | 56 |
| 11. Ahamed | C2S | 8 | 22. Mathankine | 2BC | 25 | 33. Abinash | 2CS | 59 |

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்**

| Name | Rsultse | Rank | Name | Rsultse | Rank | Name | Rsultse | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Barvajan | B2C | 2 Kilinochchi | 9.Iathusan | A2B | 8 | 17.Jenifa | BCS | 28 |
| 2. Tharaniya | 3C | 3 Kilinochchi | 10.Kamsika | 2CS | 8 | 18.Mathusa | 3C | 31 |
| 3. Sankavi | B2C | 4 | 11.Lithusana | ABC | 9 | 19.Kajaluxshi | 2CS | 35 |
| 4.Kajatheepan | 2BC | 5 | 12.Jalini | 2CS | 10 | 20.Kisalan | BCS | 38 |
| 5.Puthiyavan | BCS | 6 | 13.Thineskumar | 2BC | 10 | 21.Asika | 2CS | 45 |
| 6.Tharsana | 2BC | 6 | 14.Pavithra | 2BC | 14 | 22.Thanusikan | B2S | 55 |
| 7.Puthiyaval | C2S | 6 | 15.Laxsajini | B2C | 22 | 23.Abinaya | C2S | 58 |
| 8.Kajani | 2BC | 7 | 16.Sampavi | BCS | 24 | | | |

தொடர்புகளுக்கு:- 077 017 5346

A/L தொழினுட்பப்பிரிவு

**Techna**
Technical Institute
Smart Thinking Leads To Innovate

A/L 2024 உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்

**பொறியியல் தொழினுட்பவியல்**

| பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை | பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை |
|---|---|---|---|---|---|
| சியாமளன் | A 2B | 04 | வேணுசன் | A 2C | 27 |
| சந்தோஸ் | 3A | 02 | சுபானுயா | B 2C | 29 |
| சுவேதன் | 2B C | 02 | சதுஜன் | B 2C | 30 |
| கோபிதரன் | 3C | 06 | கவிநயா | 3C | 33 |
| நேருஜன் | A B C | 07 | சிந்துஜன் | B 2C | 34 |
| ஆருத்திரன் | 2B C | 08 | கலைச்சாந்த் | B C S | 35 |
| சுடரோன் | 3B | 10 | சௌனுசாந்த் | 3C | 36 |
| சுபர்ஷா | 3B | 12 | யதுசன் | 3C | 37 |
| மூலக்சன் அருள்ராஸ் | A B C | 14 | ஜெயசூர்யா | 3C | 39 |
| ஆரூரன் | 3B | 16 | அருண்ஜா | B 2C | 52 |
| லவகுமார் | 2B C | 17 | றிதுசன் | B 2C | 55 |
| கஜானன் | B 2C | 19 | புகழன் | C 2S | 58 |
| சுவேந்தன் | 2B C | 21 | ருஸ்லி அஹமட் | C 2S | 08 |
| ஜெயவினு | 2B C | 23 | [illegible] | A 2S | 10 |

**உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்**

| பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை | பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை |
|---|---|---|---|---|---|
| யதுராகவி | A B C | 04 | சிவதனுசியா | B 2C | 32 |
| அங்கசன் | 2B C | 11 | சரணிகன் | 2C S | 39 |
| சிவாசன் | 2B C | 12 | விமலன் | 2C S | 41 |
| சாகித்தியா | 2B C | 13 | வினிந்தா | 3C | 42 |
| குயின்சியா | 2B C | 15 | பவலீதன் | 3C | 46 |
| துர்சிகன் | 2B C | 16 | லொமியர் சாரா | 3B | 10 |
| விதுர்ஷனா | 2B C | 18 | நவின் | 2B C | 12 |
| கனிவிழி | B 2C | 21 | ஹம்சிகா | 2B C | 15 |
| பவின்சனா | 2B C | 25 | அகர்கான் | B 2C | 18 |
| மதுஷா | 3C | 26 | றியாஸ் | 3C | 11 |
| விஷாகன் | 3C | 30 | ஆதிரா | 2C S | 18 |

A/L 2024 REPEAT BATCH
A/L 2026 புதிய பிரிவு

**ஆரம்பம்**

30.04.2025 புதன்கிழமை மாலை 3.30மணிக்கு

077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 03ஆம் மாடி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0050 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... அவர்களது பணிமனையில் 29.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org